
உ

ஓம்.

கணேசாயமங்களம்.

கோவிலூர் மடாலயபதியும் திருக்களர்
ஸ்ரீ பாரிஜாதவனேசுவரர் ஸ்ரீ அமுர்தநாயகி
கோவில் திருப்பணி தர்மகர்த்தாவுமான
ஸ்ரீமத் வீரசேகரஞானதேசிக சுவாமி
திருக்களரில்

இறந்தவைபவச்சிந்து.





இதில்
கும்பாபிஷேக வைபவம், கோவில் சிங்காரம், சுவாமி
யார் இறந்த வைபவம் இம்மூன்றும்
அடங்கியிருக்கிறது.

இஃது
மதுரைமாநகரம்
சுந்தர ஜெயவீர தீர சூரக்கவிராஜ்
கந்தசாமிபிள்ளையவர்கள்
சீர்பாதம்பணிநேசன்

மன்னார்குடி தபாலாபீஸ் தெருவிலிருக்கும்
மணிககடை வியாபாரம்
கோ. சுந்திரராஜு செட்டியால்
இயற்றப்பட்டு

மன்னாரகுடி
சம்பக லெட்சுமி விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1911

விலை பைசா 6

உ

ஓம் கணேசாயமங்களம்.

திருக்களர் கோவில் கட்டிய

சுவாமியார் இறந்த வைபவச்சிந்து.

வெண்பா

அத்தனருள் அனுதினமுங்கைக்கொண்ட
உத்தமராம் கோவிலூர் சுவாமி-திருக்களரில்
செத்தகதையுரைக்க சித்தத்தில் வந்தமரும்
மத்தக்கரிமுகனே காப்பு

இராகம்-நாதநாமகிரிகை ஆதிதாளம்.

பல்லவி.

பரிதாபம் பாரீர்—திருஞானதேசிகர் செத்த
குரைதன்னைக்கேளீர்

அநுபல்லவி.

அரியவேயுரைக்கிறேன் பிரியமாயாவர்க்கும்
திருக்களர் கோவிலே பார்த்தவரெல்லோர்க்கும் (பரிதா)

சரணங்கள்.

1 தேவகோட்டை செட்டி மாருகள் யாபரும்
திருவடி கமலத்தை தினந் தொழுதுவரும்
கோவிலூர் மடத்துக் கதிபதியிவர் பாரும்
குருவென்று செட்டியார் கொண்டாடுவாரெல்லோரும்
இவர் பெரியோராம்-ஈசனுக்கு-விசுவாசமுள்ளோராம் ஐயா.

2 பக்ஷமுடனே இவர் திருககளர் ஸ்தலம் வந்து
பரமன் பாரிஜாத வனேசரடிபணிந்து
தக்ஷண கயிலாச மென்று இதையறிந்து
தருணத்தில் கோவிலைக் கட்டினார் விரைந்து
விச்சித்திரமாக-வீதிநாலுமுண்டாக்கி-வேடிக்கையாக இன்னும்

3 விதவித மண்டபம் பதினாறு முண்டாக்கி
விநோதமாய்க்கோபுரம் மேன்மையாயுண்டாக்கி
துதிபெறும் மதில்களும் பிரகாரமுண்டாக்கி
தோன்றி விளங்கிட மனதையதிலே நோக்கி
சொல்லரிதான-சபாமண்டபங்கட்டி-சுகிர்தமுங்காண இன்னும்

4 அருபத்துமூன்றுநாயன் மார்களும் வீற்றிட
அலங்காரமாய்மேடை அங்கு அமைந்திட
தூருவாசகர்முனி நிஷ்டையில் நின்றிட
தருணத்தில் நடராஜா தெரிசனம் தந்திட
பூரணையாக-புளிக்குமாமண்டபம்-கட்டினார் யூக இன்னும்

5 சோமேசராதியர் யாவரும் வந்துமே
சொல்லருமுற்சவ காலத்திலிருந்துமே
நேமமாய் அமர்த்திடவே அலங்காரம் செய்துமே
நிதம் நிதம் உற்சவம் நடத்திட நினைந்துமே
எண்ணியேயவரும்-சலவைக்கல் மண்டபம்-கட்டினார் சீரும்-இன்னும்

6 சுற்றுப்பிரகாரம் சுந்திரமாயமைத்து
சுப்பிரமணியர் வள்ளி தெய்வானையும் வைத்து
பற்றுதலாய்க் கணபதியையாரும் பார்த்து
பக்தியுடனே நின்று முன்னதாகத் துதித்து
பலனடையவே-பரமன் சன்னதி முன்னே-அமர்த்தினார் மிகவே-யாரும்

7 சிந்தைபுரஞ்செல்லாமல் சிவபூஜை தனை நாடி
சிறந்திடும் அமிர்த நாயகியைத்தேடி
வந்தனை செய்துபின் மகிழ்வுடன் கொண்டாடி
வருத்தத்தை நீக்கிட வணங்கவே முன்னாடி
வளவு மண்டபம்-பக்கத்தில் கட்டினார் அர்த்தமண்டபம்-ஐயா

8 அம்மன் ச[illegible]னதானம் சுற்றியே பார்த்திட்டு
அதைவிட்டு வெளிவர செல்லுமே நாளெட்டு
சம்மந்தர் சுந்திரர் சைவமார் நாற்றெட்டு
சித்திரத்தால் சிவ அவதாரம் பார் உற்று
இதைவிட மேலே-எழுதிருக்கிறார்-விஷ்ணு அவதாரம்போலே-நல்ல

9 தூணுக்குத் தூணு சுகமான பூவேலே
துவாரபாலகாள் முகம் ஜொலிக்குது முன்னாலே
காணுது இவவிடம் கயிலாசமிதுபோலே
கணக்கில்லா குளோப்பர்கள் மாட்டினார் மனம்போல
இதுவென்ன கோலம்-பார்த்தவருக்கெல்லாம்-மிக குதுகோலம்-இதோ

10 அன்னவாகனத்தை அமைத்தது பிர்மனோ
அழகுள்ள யானையும் அமைத்தது அவன்தானோ
உன்னதமாய்க்காம தேனுவுமிதுதானோ
உலகத்திலிதுபோல எங்குநான் காண்பேனோ
இன்னமும்பாருவெள்ளியால்செய்திட்டரிஷபத்தின்சிறுயாரும்

11 இதைப்போல வாகனம் எங்குங்கண்டதில்லை
இதன் பெருமை சொல்ல ஏட்டினிலிடமில்லை
தரையிலிதனைப்போல் செய்வதுமே தொல்லை
தரணியிலுள்ளோரே கவனிப்பீரென் சொல்லை
மிகப்பெரியோரே குதிரை வாகனத்தின் சீரறிவீரே இதோ

12 நிற்கின்ற குதிரையோ பொன்னாலே செய்தது
நீலவேணிமட்டப் புரவிபோலமைந்தது
பிரமிக்கும்படி பாரிஜாதனுக்கமைந்தது

பூதவாகனத்தின் முழியோ பொல்லாதது
கலங்கிடவேண்டாம்-கறைமிடற்றன்னலின்-அருள்நமக்குண்டாம்இன்னம்

13 கோவிலின் வாசலின் வீதியலங்காரம்
குருக்கள் வசித்திட வீடுகள் சிங்காரம்
பாவினையாய்ப்பாட சாலையும் சிங்காரம்
பலவிடத்தில் போட்ட பந்தலோ அலங்காரம்
இதைவிட-இன்னும்-எதிரிலுள்ள-புஷ்கரணிக்குமுன்னும்-பாரும்

14 மார்கழிமாதம் திருவாதிரையன்று
மாஹான் தூருவாச மாமுனிவருக்கன்று
பார்புகழும் நட- ராஜனுமேகின்று
பக்ஷமுடனே திரு நடனமாடிடவன்று
பகவானும் தங்க-கண்ணாடி மண்டபம்-கட்டினார் துலங்க-அதில்

15 கட்டியரசக்குண்டு கணக்கிலடங்காது
கண்ணாடிகளைப்போல எங்கிலுங்கிடையாது
சட்டெனப்பார்த்தவர் திரும்பிடமுடியாது
சஞ்சரமாய்க்குலைப்பர் சொல்லிலடங்காது
சித்திரவேலை-எங்கும் பார்த்தாலுமே-கண்ணாடி போலே-ஐயா

16 பாராசமுனிதீர்த்த யாத்திரை செய்யவே
பிரியமுற்று மனங் களித்துத்தானுய்யவே
பாரிஜாதரை நோக்கி அருந்தவம் புரியவே
புஷ்கரணியொன்று பூமியில் கிளம்பவே
அற்புதமாக-அமுர்தகுடத்தினின்று-உற்பனமாக-திரு

17 அமுதம் பொங்கி வழிந்து ஓடியே தங்கவே
அரிய புஷ்கரணியே மஹா தீர்த்தமாகவே
தமது மனங்குளிர்ந்து சந்தோஷமாகவே
தக்ஷண கயிலாச மென்று துதிக்கவே
ஈசனுமெழுந்து- இருடிகளுக்கு-முத்தி தந்தாரேயுகந்து -இந்த

18 பூமண்டலத்திலுள்ள யாவரும் வந்துமே
பொங்குமத்தீர்த்தத்தில் ஸ்நானங்கள் செய்துமே
நேமமாய்த்துதித்திட இல்லாது பாவமே
நிமலனை நோக்கியே தவம்புரிந்திடவுமே
மஹா தீர்த்தமதற்கு-படித்துறை மதில்களும்-கட்டினார் சுருக்கு-ஐயா

19 மிக மகத்துவமுள்ள இத்தீர்த்த பெருமையும்
விசேஷ பலனும் புண்யம் விளங்கும் சுகநலனும்
பகா ஆயிர நாவைப் படைத்த ஆதிசேடனும்
பயப்படுவாரேனும் உவப்புடனடியேனும்
பாடிடத்துணிந்தேன்-பிழை பொறுத்திட மனம்-நாடியேப்பணிந்தேன்

20 இலங்குமித்தீர்த்தத்தில் யாபரும் வந்துமே
இனிமையுடனேஸ்நானஞ் செய்து வந்தாலுமே
நலங்கொள் பாரிஜாதர் தேவியுமகிழ்ந்துமே
நன்னியே காக்ஷியை யளிப்பார்களுகந்துமே

அரிய மானிடராய்-பிறந்தோரெல்லோருக்கும்-உறிய கர்சுடராய்-இதில்

21 ஓம் சிவாயநமா வென்றோதி தீர்த்தத்து
உள்ளம் மகிழ்ந்து ஜெகதீசனை தியானித்து
க்ஷேமமாய்த்தினந்தோறும் நித்யனைத்துதித்து
நினைவைப்பரவெளியில் நிருத்தி ஈசனைப்பார்த்து

முழுதிடத்தானும்-நிமலன் இருப்பிடம்-யார்க்குமே தோணும்-இன்னும்

22 சகல பாவமும் நீங்கும் ஜன்மமுங்கடைத்தேறும்
சகல சித்திகளுண்டு சம்பத்துமிகச்சேரும்
சகல சுகமுண்டாகும் சற்புத்திர பேறாகும்
சகல காரியங்களும் தானனுகூலமாகும்

கங்கையினை கரையில்-நூறு வருட காலம்-தங்கிய நிலையில்-ஐயா

23 இத்தலம் தன்னிலே யாபரும் வந்துமே
ஈசனைத்துதித்துபின் தங்கிடத்தானுமே
மெத்தைக்கட்டடங்கள் கட்டினாரிவருமே
முத்தியடைந்திட சேர்ந்தாரே பரமுமே

இன்னமும்பாரு-விசாகத்தில் ஓடிட-போட்டாரேதேரு மிகு

24 மகத்துவமுள்ள திருக்களர் ஸ்தலமிதுவென்று
மா ஜனங்கள் வந்து குடிகொள்வாரிதிலென்று
வகை வகையாய் வீடு கட்டினார் பாரன்று
வக்கணையாகவே சொல்லுவேனானின்று

வீதியுண்டாக்கி வேணபேரிவ்வூரில்-குடிகொண்டார் நோக்கி-இன்னும்

25 நாட்டுக்கோட்டை நகரத்தாரும் தங்கவே
நாலுபக்கமும் வீடு கட்டினார் விளங்கவே
கோட்டூரு பூவனூரு முதலியார் தங்கவே
குளத்துக்கு வடபுரம் கோட்டையைப்போலவே

வீடுகள் கட்டி-இருக்கின்ற சிங்காரம்-பாரதை எட்டி ஐயா

26 இதற்குமுன் திருக்களர் இருந்த நிலைமையென்ன
இப்போது திருக்கயி லாசத்தைப்போல்மின்ன
தநியிவர் கோவில் கட்டிய சுருக்கென்ன
தற்பரனுக்கு கும்பா அபிஷேகம் செய்ததென்ன

அதைக்கொஞ்சம் கேளும்-சாமியாரடங்கின-சேதியை நாளும்

பரிதாபம் பாரீர்-திருஞானதேசிகர் செத்த
குறைதன்னைக்கேளீர்.

திருக்களர் கோவில் கட்டிய சுவாமியார் இறந்த வைபவச்சிந்து

கும்மி.

செந்திருமேவும் திருக்களர் கோவிலைக் கட்டிய சுவாமியார் செத்த
சேதி, சிந்தை மகிழ்ந்ததை யெல்லோருங்கேட்டிட செப்புகிறேனெந்தன
நேசர்களே. 1

துருவாசரிஷியென்னுமாமுனி நிருத்தராஜாவின் கூத்தைக்காண்
கோரி தவநிஷ்டை புரிந்திடவே சுவாமி கூத்தாடினாரித்திருக்களரில் 2
பாரிஜாதவனேசரென்னும நாமம் பரமனும் பூண்டு திருக்களரில்,
பார்பதி அமிர்த நாயகியோடேசனும் பண்புடனமர்ந்தாரித்தலத்தில் 3
இத்திருநாட்டிலிருந்திட்ட கோவில் இடிந்துகிடப்பதைக் கண்டுவி
ட்ட, உத்தமாகோவிலூரா சுவாமி யிவருமே உச்சிதமாய்க்கோவில் கட்
டினாரே. 4
இப்புவி மீதுள்ள ஜீவகோடிகளை எப்போதும் ரக்ஷிக்க இங்கமர்ந்த,
அப்பன் பாரிஜாதவனேசராலயத்தை அற்புதமாய்க்கட்டி முடித்தனரே 5
மாணிக்கம பச்சை வயிரம் வயிடூரியம் மாநிலம் முத்துப்பதித்தது
போல், ஆணிப்பொன் ஜோதியாயமைத்திருக்கும் நல் ஆலயம் ஜோதிப்
பிரகாசம். 6
கோபுரங்கட்டி முடிந்ததுவுமட்டும் கோடிரூபாய் செலவாகிருக்கும்,
நாவினால் சொல்ல திரமிராது இவர் நடத்திய திருப்பணி வேலைதனை 7
அருமனை நகரம் தேவக்கோட்டை அதை அடுத்த அரந்தாங்கி பள்ள
த்தூரு, சிறுவயல் ராமநாதபுரமுள்ள செட்டிகளும் பொருள் தந்தன
ராம். 8
கோடிக்கணக்காய் செலவிட்டு சாமியும் கோவிலைக்கட்டி முடித்துவி
ட்டு, நாடியேக்கும்பா அபிஷேகஞ்செய்ததை நவிலக்கூடுமோ நேசர்
களே 9
குளத்தைச்சுற்றியும் பந்தலிட்டு இன்னும் கொட்டகை பந்தலலங்
கரித்து, குலோப்பர் லஸ்டர் கொளுத்தி எரிந்தது காணவே கண்களும்
கூசம்போ 10
இந்திரன் சபை ஒரு புரமும் அதன் எதிரில் பார்லிமெண்டார் சபை
யும் பந்தலிலிதுபோல் பொம்மைகளால் வைத்த பாவனையென்சொல்
வேநண்பர்களே 11
செட்டிகள் கூட்டத்தார் தங்கியிருந்திட சிறப்பாய் பந்தலலங்கரி
த்தார், பட்டினி இல்லாமல் சாப்பிட்டிளைப்பார பாகசாலைப்பந்தல் ரெண்
டமைத்தார். 12
பிராமணன் போஜனம் செய்து வைக்க எண்ணி பெரிசாய்க்கீத்தினா
ல் பந்தலிட்டு, சிரத்தையோடு சாமான் சேர்த்திருந்த விதம் செப்பமுடி
யாததிசயமே 13
ஆயிரக்கல அரிசியோடு மற்றும் ஆகவேண்டியதோர் சாமான்களும்,
வாயினால் சொல்லி முடியாது பாருங்காண் வைத்திருந்த வகை சொல்லி
வர. 14
யாகசாலைப்பந்தல் வேரமைத்து அதில் ஆயிரம் வேதியர் ஓமஞ்செ
ய்ய, ஏகமாய் லட்சக்கலசங்கள் வைத்துமே எக்கிய ஜெபமும் செய்
தனரே 15
இப்படி எட்டுகாள் பூஜைசெய்து பின்பு ஏழு கோடி ஜனக்கூட்டத்
துடன், செப்பமே கும்பா அபிஷேகம் செய்வித்த சிறப்பைக்கேட்டு மகி
ழ்வீரே. 16

விரோதிகிருது வருஷம் சித்திரை மாசம் இருபத்திரெண்டாந்தேதி குருவாரம் புனர்பூச நக்ஷத்திரமுங் கூடிய சுபதினமதிலே. 17

காலையில் நாழிகை ஏழுக்குள்ளே நல்ல கடக லக்கின வேளையிலே, சிலமுடனே கும்பா அபிஷேகம் நடந்த சீரை என் சொல்லுவேன் தேசத்தோரே. 18

வேதியர் யாவர்க்கும் அன்னமிட்டு அப்போ வேணபடி பூரி தான் கொடுத்து நீதியாய் சந்தனம் தாம்பூலமெடுத்து நின்று மரியாதை செய்தாரய்யா. 19

ஏழை பரதேசிக்கன்னமிட்டு இவர் ஏழு நாளத்திலே மல்கொடுத்து பூஜை செய்த குருக்களெல்லோருக்கும் பொன்னாலே தக்ஷிணை தான் கொடுத்தார். 20

கொத்தர் முதலிய தச்சுஸ்தபதிக்கு கோடி வஸ்திரம் பரிசளித்து சித்திர வேலைகள் செய்தவருக்கெல்லாம் சாலுவையெடுத்து போர்த்தினாரே. 21

இப்பெரும் கும்பா அபிஷேக காட்சியை அன்று கண்டு தெரிசித்தவர்க்கு எப்போதும் நரகமில்லையென்று நீங்கள் எண்ணியே கேட்டு மகிழ்வீரே. 22

மண்டலாபிஷேகஞ் செய்துவைத்து சுவாமி மகிழ்ந்தே உற்சவமும் நடத்தி எண்டிசையோர் கொண்டாடும் விசாகத்தில் ஏற்றினார் சுவாமியை தேரின்மீது 23

முந்திக்கணபதி தேரையிழுத்தொரு மூலையில் கொண்டு நிறுத்திவிட்டு கந்தனுட தேரைச் சேர்த்து இழுத்தன்று காலையில் நிலைக்கு கொண்டுவந்தார். 24

சாமியின் தேரை இழுக்கையிலே சற்றும் அசையாதிருந்த குறையதனால், நேமமுடன் சாமியாருமேநின்றங்கு நீலகண்டனை நினைத்தாராம் 25

நினைத்தவுடன் சுவாமி தேருங்கிளம்பியே நேராகத்தெர்க்கினிலோடையிலே, தனக்குளானந்தம் பொங்கியே அப்போது தேரை நிமிர்ந்துமே பார்த்தாரய்யா. 26

பாரிஜாதவனேசருக்கு இவர் பேரிலிருந்த விசுவாசத்தினால் தேரின் மீதேரியே சாரி போகயிலே தன்னுட பதவி சேர்த்துக்கொண்டார். 27

சாமிக்கு மயக்கம் வந்ததென்று எல்லா ஜனமும் தூக்கியே பார்க்கையிலே, பூமியின் ஆசையை விட்டொளித்தாரென பேசத்துணிந்தார்கள் யாவருமே, 28

பூவனூர் ராசு முதலியாரும் ஓடி பூமானே தூக்கி மடியில் வைத்து, ஆவலுடன் பேச்சி கொடுத்து பார்க்கையில் அய்யாவும் மவுனம் சாதித்தாராம். 29

நீலகண்டனுக்காளானாரென்று நிச்சயப்படுத்திக்கொண்டுமே தான், கோலமுடனே அடக்கஞ்செய்யவெண்ணி கொடுத்தார் தந்திடைய செட்டிகட்கு 30

காகம்போல் தந்தி பறந்திடவும் அதைக் கண்டனா செட்டிகள் கூட்டத்தார்கள், ஏகக்கூட்டங்களாகத்திரண்டப்போ ஏறினார் ரயிலிலெல்லோரும். 31

கூட்டங்கூட்டமாக செட்டிமாரெல்லோரும் கூக்கரலிட்டு அழுதுக்கொண்டு நீட்டி வைத்திருக்கும் சாமியாரைக்கண்டு நின்று சருணமே செய்தனரே. 32

முகத்தோடுமுகம் அணைந்துக்கொண்டு முகவாட்டமாய நின்று புலம்புவோரும், ஜெகத்தினிலிவரை எப்போ காண்போமென்று சாமியை நினைந்தழுகுவாராம். 33

எங்கள் குடிக்கு குருவாச்சே இனி என்ன செய்யப்போறோம் நாங்களென்று, அங்கம் பதறியே நின்று புலம்பியே அடித்துமோதி அழுதாரய்யா. 34

இப்புவி ஆசை ஒழித்தவர்க்கு இனிஅழுது பலனுமில்லையென்று செப்பும்தேவாரம திருவாசகஞ்சொல்லி சேவித்தாரெல்லோருமங்குநின்று 35

ஈசனுக்கு விசுவாசமுடையோரே எடுத்து அடக்கஞ் செய்வதற்கு வாசனை திரவியம்தேன் பாலுங்கொண்டு வாகாய் அபிஷேகஞ்செய்தாரய்யா. 36

அபிஷேகமெல்லாமுடிந்தபின் சாமியை அமர்த்தினர் இந்திர விமானமீது தபமுனி இவரை தூக்கி யெடுக்கையில் தேவதுந்துமி முளங்குதய்யா. 37

அரகரா சிவ சிவா என்று சொல்லி அதிர்வேட்டுடன் கொட்டி முழக்கிகொண்டு பரகதியடைந்த சுவாமியாரைத்தூக்கி போவதை என் சொல்வேன் நேசர்களே. 38

சந்தனம் பனிநீரை வாரி இறைத்தார்கள் சுவாமியைத்தூக்கியே போ—ிலே விந்தையாய் புஷ்பமாரியும பொழிந்திட்ட வேடிக்கை என சொல்லக்கூடுமோதான். 39

குங்குமம் வாரியிரைப்பவரும் அதைக் கூவிமுகத்திலணிவோரும், சங்கரன் நாமத்தைச்சொல்லியே சிலரும் சாமியின பின்னால் தொடர்ந்தாராம். 40

ஆழக்குழியினில்தானமர்த்தி அப்போ ஆலாத்தி கற்பூரமுங்கொடுத்து தாழவே குழியில் சமாது வைக்கையில் தாங்கமுடியாத கூட்டமய்யா 41

பாரிஜாதவனே சராலயத்தில் பத்தாநாள மோக்ஷ விளக்கேற்றி, நூறாய் எரிகின்ற லட்சதீபங்களின் ஜோதியைக்கண்ணாலே பாருமிதோ 42

சேரும் வரங்களை தான தருவார பின்னால் குற்றமகல அருள்புரிவார் நீருஞ்சஞ்சலமென்று நியானித்துசிவத்யானமும் செய்வீர்களே 43

ஜனன மரணங்கள் ஒழிந்து பின்னால் சந்ததம ஈசனைத்தான் துதித்து மனதின மாயை தானகற்றி பின்னால் மங்களானந்தமாய் வாழ்ந்திருப்போம். 44

சுந்தர ஜெயவீர சூர கவிராஜ கந்தசாமி பிள்ளை பொன்னடியை, சந்ததம் பணியும சுந்திரராசுயான செப்பினேனிக்கும்மி நேசர்களே 45

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழியதனைப்போலாடினாற்போல் ஞானமில்லாதவன் சாண் வயிற்றுக்காக கவினறேன் பிழை பொருப்பீரே 46

நீடும் சிவனும் சிவகாமி வாழி நல்ல நாடுங்கணேசர் குகன் வாழி, பாடினோர் வாழி படித்தோர்கள் வாழி டண்பாயச்சிலிட்டோர் வாழி வாழி. 47

முற்றிற்று.

வெண்பா

என் கண்புள்ள அச்சுத்தலைவர்களே செப்ப கேள்
நன்மையுள்ள சிந்து இதை நாடியே—இன்னொருவர்
அச்சிலிட வந்தாலும் அவர்க்கு விடைத்தாரர
இச்சிறுவன் விண்ணப்பமிது.